# பணம் தருவதாக வரும் இ-மெயில்/ எஸ்எம்எஸ்/ தொலைபேசி அழைப்புகளை நம்பி ஏமாந்துவிடாதீர்கள்

**வெளிநாடுகளிலிருந்து வரும் நிதியை அளிப்பதாகச் சொல்லி வரும் போலி இமெயில்கள், எஸ்எம்எஸ், தொலைபேசி அழைப்புகளைக் கண்டு கவனமாக இருங்கள்**

**ஆர்பிஐ எச்சரிக்கிறது**

- ரிசர்வ் வங்கி தனி நபர்களுக்காக எந்தக் கணக்கும் வைத்திருப்பதில்லை.
- ஆர்பிஐ அதிகாரிகளின் பெயரைப் பயன்படுத்தி ஆள்மாறாட்டம் செய்வோர் மீது கவனம் தேவை.
- லாட்டரியில் பணம் விழுந்துள்ளது என்றோ வெளிநாட்டு நிதி வந்திருக்கிறது என்றோ ஆர்பிஐ-இல் இருந்து யாரும் மக்களுக்கு அழைப்பு விடுப்பதில்லை.,
- லாட்டரி மூலம் பணம் பரிசாகக் கிடைத்துள்ளது என ஆர்பிஐ யாருக்கும் இமெயில் அனுப்பவதில்லை.
- லாட்டரி பரிசு பணம் அல்லது வெளிநாட்டிலிருந்து பணம் வந்திருக்கிறது என ஆர்பிஐ யாருக்கும் எஸ்எம்எஸ் அல்லது கடிதம் அல்லது இமெயில் அனுப்பவது கிடையாது.
- https://www.rbi.org.in/ or https://rbi.org.in/ இவை மட்டும்தான் இந்திய ரிசர்வ் வங்கியின் அதிகாரப்பூர்வமான இணைய முகவரி ஆகும். மக்கள் யாரும் போலியான இணையதள முகவரிகள், அல்லது 'ரிசர்வ் வங்கி' அல்லது 'ஆர்பிஐ' போன்ற வார்த்தைகளுடன் துவங்கும் இணையதள முகவரிகள் அல்லது போலியான லோகோக்கள் உடன் வரும் தகவல்களை நம்ப வேண்டாம்.
- இது போன்ற மோசடிகளை உடனடியாக உள்ளூர் காவல் நிலையம் அல்லது சைபர் க்ரைம் பிரிவில் புகார் செய்ய வேண்டும்.
- (Foreign Exchange Management Act, 1999) அந்நிய செலாவணி மேலாண்மை சட்டம் 1999-ன் படி லாட்டரி அல்லது குழுக்கள் மூலம் பரிசுப் பணம் அனுப்புவது தடை செய்யப்பட்டுள்ளது.
- தனிநபர்/ நிறுவனங்கள்/ ட்ரஸ்ட் என யாருடைய கணக்கு அல்லது வெளிநாட்டு நிதிகளை விநியோகத்துக்காக ஆர்பிஐ வைத்திருக்காது.
- வெளிநாட்டு நிதிகளை வைத்திருப்பதாகச் சொல்லி ஆர்பிஐ எந்தவித ரசீது அல்லது சான்றிதழ்களையும் அளிக்காது.
- இதுபோன்ற தகவல்கள் வந்தால் உடனடியாக உள்ளூர் காவல்நிலையம் அல்லது சைபர் க்ரைம் பிரிவின் கவனத்துக்குக் கொண்டு சென்றால் குற்றவாளிகளை உடனடியாகப் பிடிக்கலாம்.
- உங்களது வங்கிக் கணக்குகளை வேறொருவர் கையாள்வதை அனுமதிக்கக்கூடாது! பணம் தருவதாகச் சொல்லி உங்கள் வங்கிக் கணக்கு விவரங்களைக் கேட்போரிடம் விவரங்களைப் பகிர ஒப்புக்கொள்ளாதீர்கள்.

**பொதுமக்களை எச்சரிக்கும் வகையில் ரிசர்வ் வங்கி ஏதேனும் செய்கிறதா?**

- அந்நிய செலாவணி நிதிகளைக் கையாளும் அங்கீகரிக்கப்பட்ட டீலர் வங்கிகளுக்கு எச்சரிக்கை அளிக்கும் வகையில் A.P. (DIR சீரிஸ்) சுற்றறிக்கைகளை கடந்த காலங்களில் பல முறை ரிசர்வ் வங்கி அனுப்பியுள்ளது . மே 26, 2010 தேதியிடப்பட்ட சுற்றறிக்கை A.P. (DIR series) சுற்றறிக்கை எண் 54 என்பது இதன் மிகச் சமீபத்திய சுற்றறிக்கை ஆகும்.
- போலியான சலுகைகளைக் குறித்து எச்சரிக்கும் வகையில் ஆர்பிஐ பல செய்தியறிக்கைகளை வெளியிட்டுள்ளது. மேலும் இவை ஆர்பிஐ இணையதள பக்கமான www.rbi.org.in என்ற முகவரியில் நிரந்தரப் பதிவாக வெளியிடப்பட்டுள்ளது.
- இதையே மின்னணு மற்றும் அச்சு ஊடகங்களில் இந்திய அரசாங்கத்துடன் இணைந்து 'ஜாகோ க்ராஹக் ஜாகோ' என்னும் திட்டத்தின் கீழ் வெளியிட்டுள்ளது.
- இதுபோன்ற போலி சலுகைகள் குறித்து விபரங்கள் கேட்போரிடம், உள்ளூர் காவல் நிலையங்களில் புகார் அளிக்குமாறு அறிவுறுத்தி வருகிறோம்.

**இதுபோன்ற குற்றங்களை ஆர்பிஐ விசாரிக்கிறதா?**

- இப்படிப்பட்ட குற்றவாளிகளைத் தேடிப்பிடித்துக் குற்ற வழக்கில் பதிவு செய்ய ரிசர்வ் வங்கிக்கு எந்தவொரு அதிகாரமும் கிடையாது.
- FEMA, 1999-ன் கீழ் அமலாக்கத்துறை இயக்குநரகமே இது தொடர்பான விசாரணை அமைப்பாகும்.
- மோசடிக்காரர்களிடம் ஏமாந்தவர்கள் இந்தக் குற்றங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும், மேலும் இது போன்ற மோசடிகள் வரும் காலங்களில் நடக்காமல் இருக்க உதவவும், உள்ளூர் காவல் நிலையத்துக்குச் சென்று முறையிட வேண்டும்.

**இதுபோன்ற போலி சலுகைகள் வரும் போது நான் என்ன செய்ய வேண்டும்?**

- இது போன்ற தகவல்களை முற்றிலுமாக அலட்சியம் செய்து, போலித் திட்டங்களில் இணைந்து பணம் செலுத்தாமல் இருக்கவும்.
- உள்ளூர் காவல்நிலையம்/ சைபர் க்ரைம் பிரிவு/ உள்ளூர் பொருளாதாரக் குற்றப்பிரிவு ஆகியவற்றை உடனடியாகத் தொடர்பு கொண்டு புகார் அளிக்கவும்.
- போலி சலுகைகள் குறித்து ஏதேனும் சந்தேகங்கள் இருந்தால், பொதுமக்கள் ரிசர்வ் வங்கியின் இணையதளப் பக்கத்துக்குச் சென்று தெளிவு பெறலாம்.

**லாட்டரியில் பங்குபெற வெளிநாடுகளுக்குப் பணம் அனுப்புவது FEMA சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்டுள்ளது.**

**பொதுமக்களை ஏமாற்ற மோசடிக்காரர்கள் செயல்படும் முறைகள்**

- லாட்டரி வெற்றிகள்/ வெளிநாடுகளில் இருந்து வெளிநாட்டுப் பணமாக மலிவான நிதியை அனுப்புதல்/ வேலைவாய்ப்பு/ உதவித்தொகை சலுகைகள்/ உத்தியோகம் தொடர்பான செய்திகள் / குடியேற்ற விசாக்கள்/ மதிப்புமிக்க வெளிநாட்டு பல்கலைக்கழக சேர்க்கை போன்ற பல்வேறு வடிவங்களில் மோசடி சலுகைகள் வரலாம்.
- இந்த சலுகைகள் பொதுவாக கடிதங்கள், இ-மெயில், மொபைல் போன், எஸ்எம்எஸ் ஆகியவை மூலம் வரும். சில நேரங்களில் மக்கள் நம்ப வேண்டும் என, இந்திய ரிசர்வ் வங்கியே அனுப்பிய சான்றிதழ்கள், கடிதங்கள் அல்லது சுற்றறிக்கைகள் மூலம் ரிசர்வ் வங்கி மூத்த அதிகாரிகள் அனுப்பியது போலவே மோசடிக்காரர்கள் அனுப்புவார்கள்.
- ரிசர்வ் வங்கியின் தொலைபேசி எண் அல்லது இமெயில் முகவரி போன்றே இருக்கும் போலியான எண்கள் அல்லது இமெயில் முகவரியில் இருந்து பேசும் ரிசர்வ் வங்கி மூத்த அதிகாரிகளைப் போல மோசடிக்காரர்கள் உங்களைத் தொடர்பு கொள்வார்கள்.
- அப்பாவி பொதுமக்களிடம் பணம் பறிக்க வெவ்வேறு பெயர்களில் செயல்முறைக் கட்டணம், பரிமாற்றக் கட்டணம் அல்லது வரி நீக்குதல் கட்டணம் அல்லது மாற்றுதல் கட்டணம்/ நீக்குதல் கட்டணம் என ஏமாற்றுவார்கள்.
- மோசடிக்காரர்களிடம் ஏமாறும் மக்களை, இந்தியாவில் இருக்கும் பல வங்கிகளில் இருக்கும் பல கணக்குகளுக்குப் பணம் அனுப்பச் சொல்வார்கள்.
- ஏமாற்றப்பட்ட மக்கள், முதல்முறை கேட்கப்பட்ட தொகையை செலுத்திவிட்டால் அது உடனடியாக மோசடிக்காரர்களால் எடுக்கப்பட்டுவிடும். பின்னர் புதிதாக இன்னும் அதிகமான தொகையை பணப்பரிமாற்ற வரி அல்லது பதிவுக்கட்டணம் என்ற பெயரில் கேட்பார்கள்.

**இந்த சலுகைகள் போலியானதா? ஏன்?**

துரதிர்ஷ்டவசமாக இந்த சலுகைகள் தொடர்பாக உங்களைத் தொடர்பு கொள்ள பயன்படுத்தப்படும் இமெயில் முகவரிகள், உங்களிடம் பேசுபவர், உங்களுக்கு வழங்கப்படும் சலுகை என அத்தனையும் போலிதான்.

**ஆனால், போன் அல்லது இ-மெயில் மூலமாகத் தொடர்பு கொண்டவர், பணம் ஆர்பிஐ மூலம் தனிநபர்/ நிறுவனம்/ ட்ரஸ்ட் என ஏதேனும் ஒரு வங்கிக் கணக்கில் வைக்கப்பட்டு இருப்பதாகவும், கேட்கப்பட்ட தொகையை வங்கியில் செலுத்தினால் மட்டுமே ஆர்பிஐ பணத்தை வழங்கும் எனக் கூறப்பட்டதே!**

- ரிசர்வ் வங்கி பணத்தை வழங்க எந்தவொரு தனிநபர்/ நிறுவனம்/ ட்ரஸ்ட் பெயரிலும் வங்கிக் கணக்கை வைத்திருக்காது.
- ரிசர்வ் வங்கியில் பணத்தை வைப்பு நிதியாக வைக்கும் விதம் எந்தவொரு தனி நபருக்கும் ஆர்பிஐ கணக்குத் திறக்காது.
- மேலும், இந்தக் கணக்குகளில் பணம் இருப்பதாற்கான சான்றாக யாருக்கும் எந்தவிதமான ஒப்புதல் சான்றிதழ்கள் அல்லது ரசீதுகளை ஆர்பிஐ அளிக்காது.

- ரிசர்வ் வங்கி எந்தவொரு அதிகாரிகளுக்கும் இது போன்ற பண விநியோகத்துக்கு அனுமதி அளிக்கவில்லை.

**இந்தத் திட்டங்கள்/ சலுகைகளில் பங்கேற்றால் எனது பணம் திரும்பக் கிடைக்குமா?**

- பணம் செலுத்தப்பட உடனேயே மோசடிக்காரர்கள் மொத்தமாக எடுத்துக்கொள்வார்கள். அதனால் பணம் பறிபோனது போனதுதான், ஆனால் மிகவும் முக்கியமானது, பணம் அனுப்பிய நீங்கள் அந்நித செலாவணி மேலாண்மை சட்டம் 1999-ன் அடிப்படையில் அதன் விதிமுறைகளை மீறியவர் ஆகிவிடுவீர்கள்.
- அந்நிய செலாவணி மேலாண்மை சட்டம் 1999-ன் நடப்புக் கணக்கு விதிமுறைகளின் கீழ், லாட்டரி திட்டங்கள் அல்லது லாட்டரி திட்டம் போன்ற வேறொன்றில் பங்குபெறுவது அல்லது பணம் கைமாற்றும் திட்டத்தின் கீழ் செயல்படுதல் அல்லது பணம் அல்லது பரிசை வென்றதாகக் கூறி செலுத்தப்படும் பணம் என அனைத்தும் தடைசெய்யப்பட்டவையே.
- இதுபோன்ற செயல்களில் ஈடுபடும் இந்தியக் குடிமகன் எவர் என்றாலும் பணம் வசூலித்தல் அல்லது செலுத்துதல் அல்லது வெளிநாடுகளுக்கு நேரடியாக அல்லது மறைமுகமாக இதுபோன்ற பரிவர்த்தனைகளை செய்திருத்தல் என அனைத்தும் அந்நிய செலாவணி மேலாண்மை சட்டம் 1999ன் கீழ் தண்டனைக்குரியது.

**இந்த மோசடிகள் குறித்து ஆர்பிஐ ஏன் அக்கறைக் காட்டுகிறது?**

- மக்கள் பலரும் இதுபோன்ற மலிவான நிதிகள் கொண்ட போலி சலுகைகளை நம்பி அதிகப்படியான பணத்தை இழந்துள்ளார்கள்.
- FEMA, 1999 சட்டத்தின் கீழ் இதுபோன்று பணத்தை இந்தியாவிற்கு வெளியே அனுப்புதல், பெறுதல் ஆகியன சட்டத்துக்குப் புறம்பானது.
- ஆர்பிஐ தனிநபர்/ நிறுவனங்கள்/ ட்ரஸ்ட்டுகள் பெயரில் தனி கணக்குகள் ஆர்பிஐ வைத்திருக்காவிட்டாலும், ஆர்பிஐ-இன் தலைமை அதிகாரிகள் கையெழுத்து இட்ட ஆர்பிஐ லெட்டர் பேடுகளில் இருப்பது போலவே பல்வேறு போலிக் கடிதங்கள் / சான்றுகள் புழக்கத்தில் இருக்கின்றன.
- மேலும், ரிசர்வ் வங்கி அதிகாரிகளைப் போல நடித்து மக்களை ஏமாற்றி தொலைபேசி எண்கள், போலி இ-மெயில் முகவரிகள் அளித்து மோசடி செய்கிறார்கள்.
- பொதுமக்களை ஏமாற்ற ரிசர்வ் வங்கியைப் போலவே போலி இணையதள பக்கத்தையும் உருவாக்க முயற்சிகள் எடுக்கப் பட்டிருக்கின்றன.